**உசிலம்பட்டி நகராட்சி மன்றம்**
**நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**
**நாள். 30.05.2022 திங்கட்கிழமை நேரம் : காலை 11.00 மணி**

---

**மன்றப்பொருள்–1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34, வரிசை எண்.22 நாள். 07.04.2022–இல் உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலையத்தினை புதுப்பித்தல் தொடர்பாக அறிவிப்பு வெளியிடப்பட்டு இந்நகராட்சி பேருந்து நிலையத்தை புனரமைக்கும் பணிக்கு ரூ.4.50/– கோடி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் பேருந்து நிலையத்தை முழுவதுமாக அகற்றி பெருகிவரும் பயனாளர்களின் (மக்களின்) அடிப்படையிலும் அடுக்குமாடி கடைகள் கொண்ட புதிய நவீன வசதிகளுடன் புனரமைப்பு செய்தல் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் பணிக்கு திட்டம் மற்றும் வரைபடம் மதிப்பீடு, மண் பரிசோதனை போன்ற பணிகளை தனியார் (கன்சல்டண்ட்) மூலம் பணிகளை விரைந்து முடிக்க கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் ஆகியோரால் அறிவுறுத்தப்பட்டதனை தொடர்ந்து திட்ட மதிப்பீட்டில் 1.5 சதவிகிதம் தொகைக்குள் பணியினை செய்து முடிக்க தெரிவித்ததன் பேரிலும் ரூ.5.00/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) திட்டப்பணி அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 919/2022/இ1)

**தீர்மானம் எண். 19**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–2**

மதுரை மாவட்டத்தில், உசிலம்பட்டி இரண்டாம் நிலை நகராட்சியாகும். மொத்த மக்கள் தொகை 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 35219 ஆகும். மொத்த வார்டுகள் 24 ஆகும். மொத்த பரப்பளவு 13.85 ச.கி.மீ. ஆகும். சுமார் 1.75 ஏக்கர் அமைந்துள்ள சி கிரேடு நிலையில் உள்ள பேருந்து நிலையம் ஆகும். பேருந்து நிலையம் 1991–இல் கட்டிட பணி முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றது. அதில் மொத்தம் 13 பேருந்து நிறுத்தங்கள் உள்ளது. நாள் ஒன்றிற்கு சுமார் 550 பேருந்துகள் வந்து செல்கின்றது. நகராட்சி பேருந்து நிலையத்தில் 104 வாடகை கடைகள் ஒரு அம்மா உணவகம் மற்றும் ஒரு கட்டண கழிப்பறை அமையப்பெற்று அதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.64.64 இலட்சம் வருவாய் நகராட்சிக்கு கிடைக்கப்பெறுகிறது. குடிநீர் வசதி, விளக்கு வசதி, கழிப்பிட வசதி, பயணிகள் அமரும் இடம் மற்றும் தாய்மார்கள் பாலூட்டும் அறை ஆகியவற்றுக்கான செலவினங்கள் இத்தொகையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், நகரை சுற்றி உள்ள கிராமங்களிலிருந்து வணிக நோக்கிலும், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் மற்றும் தொழிலாளர்கள் அதிகம் வந்து செல்லும் பேருந்து நிலையமாக உள்ளது. மேலும், தேனி, போடி, தென்காசி, திருநெல்வேலி, மதுரை மற்றும் சென்னை ஆகிய வெளியூர் பேருந்துகள் இந்நகர் வழியாக வந்து செல்கின்றன.

இந்நிலையில் இப்பேருந்து நிலையம் கட்டப்பட்டு 31 ஆண்டுகளுக்கு மேலாகி விட்ட நிலையில் மழைநீர் தேங்கி அவ்வப்பொழுதுமேற்கூறை பூச்சு பெயர்ந்து விழுவதாலும் அடிக்கடை பழுதுப்பணி பார்க்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசின் உத்திரவின்படி இடிந்துவிழும் நிலையிலுள்ள அனைத்து கட்டுமானங்களையும் இடித்து அப்புறப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது தென்காசி மற்றும் திருநெல்வேலி செல்லும் பேருந்துகளும், தேனியிலிருந்து மதுரை நோக்கி செல்லும் பேருந்துகளும் பேருந்து நிலையத்திற்குள் நிற்க இடமில்லாமல் பேருந்து நிலையத்திற்கு வெளியே நிற்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, பேருந்து நிலையத்தை மேம்படுத்தவும் மேற்கூறிய காரணங்களின் அடிப்படையிலும் பேருந்து நிலையத்தை முழுவதுமாக அகற்றி பெருகிவரும் பயனாளர்களின் (மக்களின்) அடிப்படையிலும் அடுக்கு மாடி கடைகள் கொண்ட புதிய நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையம் அமைக்க ரூ. 4.50 கோடி மதிப்பீட்டில் திட்டப்பிரேரணை தயார் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் அவசர அவசியம் கருதி

நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக மாற்ற கருத்துரு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெற வேண்டி கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 919/2022/இ1)

**தீர்மானம் எண். 20**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–3</u>**

மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் 2022–23– ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்ட தொடரின் மான்ய கோரிக்கை அறிவிப்புகளில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குழந்தைகள் விளையாட்டு திடல் மற்றும் சிறுவர் பூங்கா ரூ. 90.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கவண்டன்பட்டி ரோடு, டிக்கா நகர், வார்டு–23, சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.61, நகர புல எண்.215, சர்வே எண். 161/2பி, 161/1ஏ, பகுதியில் குழந்தைகள் விளையாட்டு திடல் மற்றும் சிறுவர் பூங்கா அமைக்கவும் நிர்வாக அனுமதி கோர பிரேரணை சமர்ப்பித்து மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 898/2022/இ1)

**தீர்மானம் எண். 21**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–4</u>**

மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் 2022–23–ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்ட தொடரின் மான்ய கோரிக்கை அறிவிப்புகளில் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மூன்று சமுதாய கழிப்பறைகளில் புனரமைப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி புனரமைப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், புனரமைப்பு பணி மேற்கொள்ள கீழ்க்கண்ட 3 எண்ணம் சமுதாய கழிப்பிடங்கள் தேர்வு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு மதிப்பீடுகளுடன் கூடிய கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு–9, கருக்கட்டான்பட்டி மாரியம்மன்கோவில் அருகில் | 8.00 |
| 2 | வார்டு–11, வடகாட்டுப்பட்டி | 8.00 |
| 3 | வார்டு–19 குருசாமிகோவில் தெரு | 8.00 |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 913/2022/இ1)

**தீர்மானம் எண். 22**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–5</u>**

இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களின் அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தப்படும் Airtel Post paid CUG எண்கள் 7397382171 மற்றும் 7397382172–க்கு பட்டியல் தொகை ரூ. 32193/– செலுத்துமாறு Airtel நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ. 32193/– Airtel நிறுவனத்திற்கு செலுத்தவும், டிசம்பர் 2022 வரை ஒவ்வொரு

மாதமும் வரப்பெறும் பட்டியல் தொகைக்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 138/2018/சி1)
**தீர்மானம் எண். 23**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–6**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34 வரிசை எண்.22 நாள்.07.04.2022–ல் உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நியைத்தினை புதுப்பித்தல் பணிக்கு தேவையான மண் பரிசோதனை மேற்கொள்ளுதல் Structural Design, திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் தயாரிக்கும் பணிகளை தனியாார் கன்சல்டன்ஸி மூலம் மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலையத்தினை புதுப்பித்தல் பணிக்கு தேவையான மண் பரிசோதனை மேற்கொள்ளுதல் Structural Design, திட்ட மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் தயாரிக்கும் பணிகளை தனியாார் கன்சல்டன்ஸி மூலம் மேற்கொள்ளுதல். | 5.00 | நந்தினி கன்ஸ்ட்ரக்சன், உசிலம்பட்டி | 2.60% குறைவு |
| | | | கலை கன்ஸ்ட்ரக்சன், உசிலம்பட்டி | 0.60% குறைவு |
| | | | தேவி கன்ஸ்ட்ரக்சன், உசிலம்பட்டி | Est.Amount |

மேற்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் மிக குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நந்தினி கன்ஸ்ரக்ஸன், உசிலம்பட்டி என்பவரின் விலைப்புள்ளிகள் ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண். 919/2022/இ1)
**தீர்மானம் எண். 24**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–7**

15–வது மத்திய நிதிக்குழு மானிய திட்டம் Tied Grant நிதியில் ஒதுக்கப்பட்ட 6 பணிகளில் குடிநீர் பணியில் 4–வது பணியின் விபரம் 110 எச்.பி. Horizontal Squirrel cage Motor என்பதற்கு பதிலாக 110 எச்.பி., Submercible Motor என தவறுதலாக கொடுக்கப்பட்டதால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகள் விபரப்பட்டியலிலும், 110 எச்.பி. Horizontal Squirrel cage Motor என்பதற்கு பதிலாக 110 எச்.பி., Submercible Pump என அனுமதி வழங்கப்பட்டதால் குடிநீர் பணி அவசரம் அவசியம் கருதி 110 எச்.பி. Horizontal Squirrel cage Motor -க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ. 9.90

இலட்சத்தில் புதிதாக வாங்கி பொருத்திடவும் திருத்திய பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1).மன்றம் அனுமதி வழங்கலாம்

2). திட்டப்பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 2719 /2022/இ1

**தீர்மானம் எண். 25**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–8</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 13 முதல் 24 வார்டுகளில் 21 எண்ணம் கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு M/s. தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சிஸ், உசிலம்பட்டி நிறுவனத்தின் மூலம் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி கொசு ஒழிப்பு பணியாளர்களின் ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைகிறது. தற்போது டெங்கு காய்ச்சல் அதிக அளவில் பரவுவதை தடுக்கும் விதமாகவும் , பொது சுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் M/s. தேவதர்ஷினி மேன்பவர் ஏஜென்சிஸ், உசிலம்பட்டி நிறுவனம் மூலம் 21 பணியாளர்களை கொண்டு 01 முதல் 24 வார்டுகளில் மேலும் மூன்று மாதங்களுக்கு (மே 2022, ஜூன் 2022 மற்றும் ஜூலை 2022) டெங்கு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.6,95,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2. பொது சுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் டெங்கு தடுப்பு நடவடிக்கையின் அவசியத்தை கருத்தில் கொண்டும் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க எண் 91/2015/எச்1)

**தீர்மானம் எண். 26**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–9</u>

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 276/2020/அ2, நாள். 30.03.2022–இல் இந்நகராட்சி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூருக்கு செலுத்த வேண்டிய 2020–21 மற்றும் 2021–22–க்கான பங்குத்தொகை கீழ்க்கண்ட விவரப்படி செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 2020–21 பங்குத்தொகை | ரூ. 20,000/– |
| 2021–22 பங்குத்தொகை | ரூ. 30,000/– |
| | மொத்தம் ரூ. 50,000 |

மேற்படி செலுத்த வேண்டிய பங்குத்தொகை ரூ. 50,000/– தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூருக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2293/2016/சி1)

**தீர்மானம் எண். 27**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–10**

உசிலம்பட்டி நகராட்சி வார்டு–14, கீழப்புதூர் சொசைட்டி தெருவில் வசிக்கும் பொது மக்களின் நலன் கருதி ரூ.3.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1). மன்ற அனுமதி வழங்கலாம்.

2). திட்டப்பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1109/2020/இ1)

**தீர்மானம் எண். 28**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–11**

2021–2022–ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் நிதி ஒதுக்கீட்டின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளுக்கு மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் & பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் கடிதம் ந.க.எண்.டி2/142/2022 நாள்.18.04.2022 அவர்களின் கடிதத்தில், நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, நிர்வாக அனுமதியில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி தேர்வு செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மற்றும் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது

| வ. எண். | திட்டம் / வேலையின் பெயர் | மதிப்பிட்டு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | 2–வது வார்டு சலவை தொழிலாளர்களுக்கு பல் நோக்கு கட்டிடம் கட்டுதல் | 5.00 |
| 2 | 19 –வது வார்டு குருசாமி கோயில் அருகில் பல்நோக்கு கட்டிடம் கட்டுதல் | 8.00 |
| 3 | கீழப்புதுார் மயானத்தில் போர்வெல், மோட்டார் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் | 5.00 |
| 4 | 24 –வது வார்டு கவண்டன்பட்டியில் அரசினர் கள்ளர் தொடக்கப்பள்ளிக்கு வடபுறம் உள்ள தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 3.00 |

**அலுவலகக்குறிப்பு:-**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). திட்டப்பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 324/2022/அ1)

**தீர்மானம் எண். 29**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–12**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.28369/ஜே3/2018, நாள்.22.11.2018–இல் உத்தரவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.101, நாள்.30.04.1997–ஆம் தேதிய

திருத்தியமைக்கப்படவேண்டிய அளவுகோலின்படி நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு ஏற்றவாறு துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுவதால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்கள் போக மீதமுள்ள துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கு அனுமதி கோரப்பட்டதில் இந்நகராட்சிக்கு மேற்கண்ட செயல்முறை உத்தரவுபடி 25 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்த விதிமுறைகளுக்குட்பட்டு தனியார் மயமாக்கிக்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட செயல்முறை உத்தரவின்படி 25 நபர்களைக்கொண்டு வார்டு எண் 01,02,03,04,05,08 மற்றும் 09 ஆகிய வார்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் 01.01.2019 முதல் 31.12.2021 வரை திரு.கா.ஹரிஹரன், ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க எண் 21787/2021/EA-2 நாள் 02.10.2021–இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு தயார் செய்து 19.11.2021ல் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே வழங்கப்பட்ட தனியார் மய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்தது 30.04.2022 உடன் முடிவடைவதால் 19.11.2021ல் அனுப்பப்பட்ட பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கி, பழைய ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் மே 2022, ஜுன் 2022 மற்றும் ஜுலை 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும் அதற்காகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1). இந்நகராட்சியின் பொது சுகாதாரத்தினை பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டும், அதே சமயத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க எண் 21787/2021/EA-2 நாள் 02.10.2021–இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கி மே 2022, ஜுன் 2022 மற்றும் ஜுலை 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும், அதனால் ஏற்படும் செலவினத் தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.930/2018/எச்1)**

**தீர்மானம் எண். 30**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–13</u>**

உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகளிலும் அமைந்துள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் நகரின் பிரதான குழாய்களை சரி செய்யும் பொருட்டு பிவிசி உதிரிபாகங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகளிலும் அமைந்துள்ள குடிநீர் விநியோக குழாய்கள் மற்றும் நகரின் பிரதான குழாய்களை சரிசெய்யும் பொருட்டு பிவிசி உதிரிபாகங்கள் கொள்முதல் செய்யும் பணி | 5.00 | திரு. கே.எம். ராஜேஸ்கண்ணா | 0.22 % குறைவு |
| | | | திருமதி. என்.பேச்சி | 1.40 % அதிகம் |

மேற்படி பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.எம்.ராஜேஸ்கண்ணா ஒப்பந்ததாரர், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 805/2022/இ1)

**தீர்மானம் எண். 31**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–14**

உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகளிலும் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க்களில் ஏற்படும் மோட்டார் பழுது,பைப்புகள் ,வால்வுகள் மற்றும் இதர உபகரணங்கள் பழுதுகளை உடனடியாக மாற்றி பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி க்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகளிலும் அமைந்துள்ள ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய சின்டெக்ஸ் டேங்க்களில் ஏற்படும் மோட்டார் பழுது, பைப்புகள் , வால்வுகள் மற்றும் இதர உபகரணங்கள் பழுதுகளை உடனடியாக மாற்றி பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி | 9.80 | திரு.கே.எம். ராஜேஸ் கண்ணா | 0.23% குறைவு |
| | | | திரு.சி.சுதாகர் | 0.24% அதிகம் |

மேற்படி பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள திரு.கே.எம்.ராஜேஸ்கண்ணா ஒப்பந்ததாரர், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.807/2022/இ1)

**தீர்மானம் எண். 32**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–15**

நமக்கு நாமே திட்டம் 2021–22–இன்கீழ் பொதுமக்கள் பங்களிப்புடன் திட்ட பணிக்கு மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கு தொகை இந்நகராட்சியில் செலுத்தப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 27519–38/2021/பி2, நாள். 30.04.2022–இன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் மற்றும் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | Providing of Biodigestor toilet at opposite to | 2.40 | 0.80 |

| | | | |
|---|---|---|---|
| | Bus Stand (1set) | | |
| 2 | Maintenance and Repair work of Public toilet at Near Ward No.24 Kavandanpatti and Construction of New Septic Tank in Ward No.01 Mamarathupatti Community Toilet | 3.10 | 1.03 |
| 3 | Providing 150mm dia Deep Borewell with Minipower Pump with HDPE Tank at ward No.24 Othapatti Salai Near Perumal Kovil @ Kavandanpatti | 2.00 | 0.67 |

**அலுவலகக்குறிப்பு:-**

1). மன்ற அனுமதி வழங்கலாம்.

2). திட்டப்பணிகள் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2182/2021/இ1)

**தீர்மானம் எண். 33**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள் :16**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 22 பேரையூர் ரோட்டில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை M/s. Peoples trust in Technical institute, திருமங்கலம் தொண்டு நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு எரியூட்டப்படும் பிரேதம் ஒன்றிற்கு ரூ.3000/– மனுதாரர்களிடம் இருந்து வசூல் செய்து அதில் 40% நகராட்சி பங்குத் தொகையாக ரூ.1200/– நகராட்சிக்கு செலுத்தி வருகிறது. மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 28.02.2022 உடன் முடிவடைவதால் உள்ளாட்சி தேர்தல் நடைமுறையில் இருந்த காரணத்தினால் நீட்டிப்பு செய்ய இயலவில்லை. மேலும் நவீன எரிவாயு தகனமேடை பராமரிக்கும் பணிக்கு வேறு எவரும் முன்வராத காரணத்தினால் ஏற்கனவே நவீன எரிவாயு தகன மேடையினை பராமரித்து வரும் M/S Peoples trust in Technical institute, திருமங்கலம் நிறுவனத்திற்கு மேலும் ஓராண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பிக்கவும், ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டவாறு எரியூட்டப்படும் பிரேதம் ஒன்றிற்கு ரூ.3000/– மனுதாரர்களிடம் இருந்து வசூல் செய்யவும், அதில் 40% நகராட்சி பங்குத் தொகையாக தொண்டு நிறுவனம் செலுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க எண் 2237/2016/எச்1)

**தீர்மானம் எண். 34**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–17**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் நகர் மன்ற தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவியேற்ற நிலையில் அலுவலகத்தில் நகர் மன்ற தலைவர் அறையில் இருந்த கண்காணிப்பு கேமராக்களின் மானிட்டரை ஆணையாளர் அவர்களின் அறைக்கு மாற்றம் செய்யும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 16,000/–இல் பொதுநிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1016/2022/இ1)

**தீர்மானம் எண். 35**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–18**

இந்நகராட்சியில் 2022 ஆம் ஆண்டுக்கு சொத்துவரி சீராய்வு சம்பந்தமாக பிரிண்ட் எடுக்கவும் அனைத்து பிரிவு எழுத்தர்களுக்கும் ஏ4 வெள்ளை பேப்பர், 50 ரீம்கள் கொள்முதல் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ. 13,664/– ஏ–2295 The Madurai Co-operative Printing Works Ltd., அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. அலுவலக பணி அவசர அவசியம் கருதி செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2014)

**தீர்மானம் எண். 36**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–19**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 1725/2022/எம்.3, நாள். 24.02.2022 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 1723/2022/பி1, நாள். 01.04.2022–இல் இரண்டாம் நிலை நகராட்சிக்கு 3 எண்ணம் ஈப்பு வாகனம் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பேரில் தற்போது உள்ள வாகனங்கள் தவிர்த்து கூடுதலாக தேவைப்படும் புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கு கருத்துரு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரண்டாம் நிலை நகராட்சியான உசிலம்பட்டி நகராட்சியில் தற்போது 2 எண்ணம் ஈப்பு வாகனங்கள் பயன்படுத்துப்பட்டு வருவதால் கூடுதலாக ஒரு ஒரு புதிய ஈப்பு வாகனம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 10.00/– இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், புதிய ஈப்பு வாகனம் வாங்கும் பணிக்கான கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 895/2022/இ1)

**தீர்மானம் எண். 37**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–20**

உசிலம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறையில் ஏசி பழுது ஏற்பட்டு பயன்படுத்த இயலாத சூழ்நிலையில் உள்ளது. பழுது நீக்கும் பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ. 4000/–இல் பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 1097/2022/இ1)

**தீர்மானம் எண். 38**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–21**

உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகளிலும் அமைந்துள்ள தெருவிளக்குகள் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய மின் விளக்குகள் எரிய தேவையான மின்சாதன உதிரி பாகங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | உசிலம்பட்டி நகராட்சி 24 வார்டுகளிலும் அமைந்துள்ள தெருவிளக்குகள் அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரி செய்ய மின் விளக்குகள் எரிய தேவையான மின்சாதன உதிரி பாகங்கள் கொள்முதல் செய்யும் பணி | 9.80 | M/s. SRI VARI Traders Usilampatti | **0.08%** குறைவு |
| | | | M/s. VBS Wires Bearing, Usilampatti | **0.18%** அதிகம் |

மேற்படி பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.SRIVARI Traders நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றத்தின் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.806/2022/இ1)

**தீர்மானம் எண். 39**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–22**

வார்டு–14 கீழப்புதூர் சொசைட்டி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு–14 கீழப்புதூர் சொசைட்டி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 3.00 | திரு.ஜெ. சீதாராமதாசன் | 0.40% குறைவு |
| | | | திரு. கே.எம். ராஜேஸ்கண்ணா | 0.56% அதிகம் |

மேற்படி பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஜெ. சீதாராமதாசன், ஒப்பந்ததாரர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றத்தின் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.809/2022/இ1)

**தீர்மானம் எண். 40**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–23</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண் TN 58 AW 3247 டிப்பர் லாரிக்கு வாகன காப்பீடு **28.05.2022** உடன் முடிவடைவதால் **(29.05.2022** முதல் **28.05.2023** வரை**)** மேலும் ஓராண்டு காலத்திற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க பட்டியல் தொகை ரூ.**32576/–** யுனைடெட் இந்திய இன்சுரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தி வாகன காப்பீடு புதுப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**
வாகன பராமரிப்பின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க எண் 2217/2016/எச்1)
**தீர்மானம் எண். 41**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–24</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாகன எண் TN 58 AW 2747 ஈப்பு வாகனத்திற்கு வாகன காப்பீடு **31.05.2022** உடன் முடிவடைவதால் **(01.06.2022** முதல் **31.05.2023** வரை) மேலும் ஓராண்டு காலத்திற்கு வாகன காப்பீடு புதுப்பிக்க பட்டியல் தொகை ரூ.**16243/–** யுனைடெட் இந்திய இன்சுரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்தி வாகன காப்பீடு புதுப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**
வாகன பராமரிப்பின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க எண் 2887/2013/எச்1)
**தீர்மானம் எண். 42**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–25</u>**

நமக்கு நாமே திட்டம் **2021–22**–இன்கீழ் பொதுமக்கள் பங்களிப்புடன் திட்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | Providing of Bio digester toilet at opposite to Bus Stand (1set) | 2.40 | திரு. கே.எம். ராஜேஸ்கண்ணா | 0.15% குறைவு |
| | | | திரு.ஜெ. சீதாராமதாசன் | 0.21% அதிகம் |
| 2 | Providing 150mm dia Deep Borewell with Minipower Pump with HDPE Tank at ward No.24 Othapatti Salai Near Perumal Kovil @ Kavandanpatti | 2.00 | திரு.ஜெ. சீதாராமதாசன் | 0.73% குறைவு |
| | | | திரு. கே.எம். ராஜேஸ்கண்ணா | 2.48% அதிகம் |
| 3 | Maintenance and Repair work of Public toilet at Near Ward No.24 Kavandanpatti and Construction of New Septic Tank in Ward No.01 Mamarathupatti Community Toilet | 3.10 | திருமதி. சுந்தரி | 0.01% குறைவு |
| | | | திரு. கே.எம். ராஜேஸ்கண்ணா | 3.58% அதிகம் |

மேற்படி பணிகள் ஒவ்வொன்றிக்கும் தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள
வரிசை எண் .1–இல் உள்ள பணிக்கு திரு. கே.எம். ராஜேஸ்கண்ணா, ஒப்பந்ததரார்,
வரிசை எண் .2–இல் உள்ள பணிக்கு திரு. ஜெ. சீதாராமதாசன் ஒப்பந்ததரார்,
வரிசை எண் .3–இல் உள்ள பணிக்கு திருமதி. சுந்தரி ஒப்பந்ததரார், மற்றும் ஆகியோரின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.2182/2022/இ1)
**தீர்மானம் எண். 43**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–26**

உசிலம்பட்டி நகராட்சியில் 2021–22 –ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | 2–வது வார்டு சலவை தொழிலாளர்களுக்கு பல் நோக்கு கட்டிடம் கட்டுதல் | 5.00 | திரு.ஆர்.பிரகாஷ் | 0.25% குறைவு |
| | | | திரு.ஆர்.சதீஸ், | 1.68% அதிகம் |
| 2 | 19 –வது வார்டு குருசாமி கோயில் அருகில் பல்நோக்கு கட்டிடம் கட்டுதல் | 8.00 | திரு.ஆர்.ரவிக்குமார் | 0.24% குறைவு |
| | | | திரு.சுதாகர் | 0.98% அதிகம் |
| 3 | கீழப்புதுார் மயானத்தில் போர்வெல்,மோட்டார் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் அமைத்தல் | 5.00 | திரு.ஆர்.பிரகாஷ் | 0.25% குறைவு |
| | | | திரு.ஆர்.சதீஸ், | 1.98% அதிகம் |
| 4 | 24 –வது வார்டு கவண்டன்பட்டியில் அரசினர் கள்ளர் தொடக்கப்பள்ளிக்கு வடபுறம் உள்ள தெருவில் பேவர் பிளாக் அமைத்தல் | 3.00 | திரு.ஆர்.ரவிக்குமார் | 0.24% குறைவு |
| | | | திரு.சுதாகர் | 0.73% அதிகம் |

மேற்படி பணிகள் ஒவ்வொன்றிக்கும் தலா இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள்களில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள
வரிசை எண் .1–இல் உள்ள பணிக்கு. திரு.ஆர்.பிரகாஷ்,ஒப்பந்ததராா்,
வரிசை எண் .2–இல் உள்ள பணிக்கு திரு.ஆர்.ரவிக்குமார் ஒப்பந்ததரார்
வரிசை எண் .3–இல் உள்ள பணிக்கு திரு.ஆர்.பிரகாஷ்,ஒப்பந்ததரார் மற்றும்
வரிசை எண் .4–இல் உள்ள பணிக்கு திரு.ஆர்.ரவிக்குமார் ஒப்பந்ததரார், ஆகியோரின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**
மன்றத்தின் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.324/2022/இ1)
**தீர்மானம் எண். 44**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–27</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.40032/2012/ஆர், நாள். 01.04.2022–இல் வரப்பெற்ற சுற்றறிக்கையின்படி இந்நகராட்சியில் சொத்துவரி சீராய்வு 2022

சொத்துவரி / காலியிடவரி சீராய்வு செய்து மண்டலங்களுக்கான அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்து பொதுமக்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் கோரிய அறிவிப்பு இரண்டு உள்ளூர் தமிழ் நாளிதழ்கள் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழும் பதிப்பு அறிவிப்பு கீழ்க்கண்ட நாளிதழில்களில் வெளியிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | இந்து தமிழ்திசை நாளிதழ்<br>Star Consultancy Advertisement Bill | ரூ. 19468/– |
| 2 | தமிழ்ச்சுடர் தினசரி நாளிதழ்<br>ESS ESS Publication Advertisement Bill | ரூ. 38850/– |
| 3 | TRINITY MIRROR<br>National English daily Advertisement Bill | ரூ. 22650/– |
| | மொத்தம் | ரூ. 80968/– |

மேற்கண்ட சொத்துவரி சீராய்வு 2022 பணிக்கு பத்திரக்கை விளம்பரம் செய்த நாளிதழின் மொத்த செலவினத்தொகை ரூ. 80968/–ஐ வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1775/2022/அ1)
**தீர்மானம் எண். 45**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–28</u>

உசிலம்பட்டி நகராட்சி பேருந்து நிலையத்தில் பராம்பரியமாக சங்கு ஒலிக்கும் அறை பயன்பாட்டில் இல்லாமல் இருந்து வந்தது. தற்போது புதிதாக பொறுப்பேற்றிருக்கும் நகர்மன்ற தலைவர் அவர்கள் இச்சங்கினை தினசரி உரிய நேரங்களில் ஒலிக்க செய்ய வேண்டும் என அறிவுறுத்தியதனை தொடர்ந்து பழுதுான சங்கினை சரி செய்து ஒலிக்க செய்யப்பட்டது. அதற்காக செலவினத்தொகை ரூ.5980/–யை பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 1190/2022/இ1)
**தீர்மானம் எண். 46**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

<u>மன்றப்பொருள்–29</u>

உசிலம்பட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த கட்டிடங்கள் ஆய்வு செய்ததில் தேனி ரோடு, ஆர்.சி. சிறுமலர் பள்ளி அருகில் அமைந்துள்ள பயணியர் நிழற்குடை மற்றும் வார்டு–17 ஹரிசன் பள்ளி தெருவில் உள்ள சமுதாய கூடம் ஆகியவற்றில் மேற்கூரை மற்றும் பிற பகுதிகள் மிகவும் சேதமடைந்த நிலையில் மழை காலங்களில் இடிந்து விழும் சூழ்நிலையில் உள்ளதால் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் மேற்படி கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 70,000/– பொது நிதியில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1191/2022/இ1)
**தீர்மானம் எண். 47**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–30</u>**

இந்நகராட்சியின் நிர்வாகத்திற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்படும் வழக்குகளுக்கு சென்னை உயர்நீதிமன்றம் வழக்கறிஞர் திரு. வே.ஆஸ்டின் அவர்கள் (Bar Council Enrollment no 3501/2016) 18.05.2022–ஆம் நாளில் நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தில், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கறிஞராக பணியாற்றி வருவதாகவும், அரசுக்கு எதிராக தொடுக்கப்பட்ட கட்டிட அனுமதி, ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட பல்வேறு வழக்குகளிலும் மற்றும் இதர வழக்குகளையும் திறம்பட எடுத்து நடத்திய அனுபவம் உள்ளதாகவும் தன்னை உசிலம்பட்டி நகராட்சிக்கு நிலை வழக்கறிஞராக நியமனம் செய்வதற்கு ஆவண செய்யக்கோரியுள்ளார். இந்நகராட்சியின் நிர்வாக நலன் கருதியும், திரு. V.ஆஸ்டின் என்பவரை இந்நகராட்சியின் நிலை வழக்கறிஞராக கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1).குறித்த காலத்திற்குள் தொடர்புடைய மனுக்கள் மற்றும் மேல்முறையீடு மனுக்களுக்கு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும்.

2).வழக்கு விசாரணைக்கு வரப்பெறும் தேதிகள், விசாரணையின் முடிவு, தீர்ப்பு வரப்பெற்ற விபரங்களை உடனுக்குடன் நகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும்.

3). மேல்முறையீடு செய்யப்பட வேண்டிய வழக்குகள் மீது உரிய காலத்திற்குள் மேல்முறையீடு செய்யவும் மேல்முறையீடு செய்யப்பட்ட விபரத்தை நகராட்சிக்கு தெரியபடுத்த வேண்டும்.

4).அரசால் அனுமதிக்கப்பட்ட வழக்கு கட்டணம் மட்டுமே கோரப்படவேண்டும்.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

திரு. வே.ஆஸ்டின், வழக்கறிஞர் அவர்களை மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், இந்திய வழக்கறிஞர்கள் சட்டத்திற்கு உட்பட்டும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு உசிலம்பட்டி நகராட்சியின் நிலை வழக்கறிஞராக (Standing council) மதுரை நியமனம் செய்வது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

( ந.க.எண். 1143/2022/சி1)

**தீர்மானம் எண். 48**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்–31</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க எண் 21787/2021/EA-2 நாள் 02.10.2021–இல் வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு தயார் செய்து 19.11.2021–இல் பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம், சென்னைக்கு அனுப்பட்டு இதுநாள் வரை போதிய பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூல நிரப்பிட காலதாமதம் ஆகும் காரணத்தினாலும் மேலும் ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தம் 30.04.2022 உடன் முடிவடைவதால் 19.11.2021–இல் அனுப்பட்ட பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கி, தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பேருந்து நிலையம் மற்றும் கோர்ட் வளாக நீர்த்தேக்க தொட்டிகளின் பாதுகாப்பு கருதியும் காவலர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்ததாரர் பணியாளர்களை ஏற்கனவே ஒப்பந்தம் வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.ஆர்.ரவிக்குமார், உசிலம்பட்டி என்பவர் மூலம் 16 பணியாளர்களை கொண்டு ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதிய அடிப்படையில் ஏப்ரல் 2022, மே 2022 மற்றும் ஜூன் 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும் அதற்காகும் செலவினத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1). இந்நகராட்சியின் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மற்றும் தலைமை நீரேற்றும் நிலைய காவலர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டும், அதே சமயத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க எண் 21787/2021/EA-2 நாள் 02.10.2021–இல்

வெளிக்கொணர்வு முகமை மூலம் போதுமான பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவது தொடர்பாக மதிப்பீடு பிரேரணை இசைவு பெற்று வருவதை எதிர்நோக்கி ஏப்ரல் 2022, மே 2022 மற்றும் ஜுன் 2022 ஆகிய மூன்று மாதங்களுக்கு மட்டும் ஒப்பந்தத்தை புதுப்பித்து உத்தரவு வழங்கவும், அதனால் ஏற்படும் செலவினத் தொகை ரூ.5,17,920/– மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). குடிநீர் திட்ட பணி அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியாட்களை பணியமர்த்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 2795/2021/இ1)
**தீர்மானம் எண். 49**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–32**
இந்நகராட்சியின் 2020–21–ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிகளுக்கு தணிக்கை முடிவுற்றது. அதற்குரிய தணிக்கைக் கட்டணம் தொகை ரூ.95720/– (ரூபாய் தொன்னூற்று ஐந்தாயிரத்து எழுநூற்று இருபது மட்டும்) (PPC Code 0070 – 060-110-AA-22706) அரசு தலைப்பில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு:-**
1). மன்றம் அனுமதி வழங்கலாம்.
2). மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண். 1936/2006/பி1)
**தீர்மானம் எண். 50**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–33**
இந்நகராட்சியின் 2020–21–ஆம் ஆண்டுக்கான வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர் வழங்கல் நிதிகளுக்கு தணிக்கை அறிக்கை ஐந்து காப்பி பிரிண்ட் எடுத்து புதிதாக வடிவில் பைண்டிங் செய்த செலவினம் ரூ. 9550/– (ரூபாய். ஒன்பதாயிரத்து ஐநூற்று ஐம்பது மட்டும்) சபிதா டைப் ஆபீஸ் மதுரை அவர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
**அலுவலகக்குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 794/2020/பி1)
**தீர்மானம் எண். 51**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–34**
சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–2022–ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் தமிழ்ச்சுடர் நாளிதழில் 04.05.2022 அன்று பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ. 43050/–ஐ ESS ESS Publication என்ற பெயரில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
**அலுவலக குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.324/2022/இ1)
**தீர்மானம் எண். 52**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–35**

சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு நடமாடும் கடைகள் அமைத்தல் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் தமிழ்ச்சுடர் நாளிதழில் **04.05.2022** அன்று பிரசுரம் செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ. **43050/—**ஐ ESS ESS Publication என்ற பெயரில் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1621/2022/இ1)

**தீர்மானம் எண். 53**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**<u>மன்றப்பொருள்—36</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித்தில் ந.க.எண். 5742/2022/GD2, நாள். 17.05.2022—இல் தெரிவித்துள்ளபடி உசிலம்பட்டி நகராட்சி உள்ளாட்சி தேர்தலில் திருமதி.ஜி.செல்வி 7870/2022 வழக்கு எண்ணில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு தொடர்ந்தார். அவ்வழக்கிற்கு ஆஜரான வழக்கறிஞர் 1).திரு. ஏ.சண்முகசுந்தரம் அட்வகேட் ஜெனரல் மற்றும் பி.முத்துக்குமார் State Government pleader ஆகியோர்களுக்கு **15000+5000= 20000/—** (ரூபாய் இருபதாயிரம் மட்டும் வழங்கலாம் மன்றத்தின் அனுமதிக்கு வழங்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1). மன்றம் அனுமதி வழங்கலாம்.

2). மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 1122/2021/பி1)

**தீர்மானம் எண். 54**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்—37**

15—வது மத்திய நிதிக்குழு மானிய திட்டம் Tied Grant 2020-21 ஆண்டுக்கான நிதியில் தேர்வு செய்யப்பட்ட 6 பணிகளில் 4 பணிகள் முடிவடைந்து 1 பணி நடைபெற்று வருகிறது. 6 –வது பணியான JCB இயந்திரம் கொள்முதல் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.33.90/—இலட்சம் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்ட மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டது. அதுசமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவின் பேரிலும் நகராட்சி மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களின் அறிவுறுத்தலின்படியும் JCB இயந்திரம் கொள்முதல் செய்யும் பணிக்கு பதிலாக மாற்று பணி தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டது அதனடிப்படையில் நகராட்சிக்கு சொந்தமான MCC மற்றும் Crematorium அருகில் உள்ள காலியிடத்தில் புதிதாக Bio-Gas Plant அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.38.00/—இலட்சத்தை 15—வது மத்திய நிதிக்குழு மானிய திட்டம் Tied Grant 2020-21 ஆண்டுக்கான நிதியில் ஈடு செய்யவும், அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 2719/2021/இ1

**தீர்மானம் எண். 55**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்—38**

குடிநீர் பணி அவசரம் அவசியம் கருதி எஸ்,மேட்டுபட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் 110 எச்.பி. Horizontal Squirrel cage Motor -க்கு தயார் செய்யப்ட்ட மதிப்பீட்டின்படி புதிதாக வாங்கி பொருத்திடும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்புநோக்கு பட்டியலின்படி |
|---|---|---|---|---|
| 1 | supply and delivery and fixing of New 110 HP HSC Motor with pump 1 No at S.Mettupatti Water Supply Head Works | 9.90 | திருமதி.என்.பேச்சி, உசிலம்பட்டி | 0.04% குறைவு |
| | | | திரு.ஆர்.ரவிக்குமார், உசிலம்பட்டி | 0.08% அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.என்.பேச்சி, உசிலம்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றத்தின் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2119/2022/இ1)

**தீர்மானம் எண். 56**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–39**

இந்நகராட்சியில் தலைமை நீரேற்று நிலைய பொருத்துநர் நிலை–II (08.02.2016 முதல்), எலக்ட்ரீசியன் நிலை–II (29.09.2011 முதல்), குழாய் திறப்பாளர்–1 ( 01.07.2021 முதல் ), காவலர்–1 ( 01.08.2016 முதல் ), டிரைவர்–1(18.04.2022முதல்), கிளீனர்–1 (24.08.2017 முதல்) மற்றும் தூய்மை பணியாளர்–31 ஆகிய பணியிடங்கள் நீண்ட வருடங்களாக காலியாக இருந்து வருகிறது. இதனால் குடிநீர், பெதுச்சுகாதாரம் போன்ற அத்தியாவசிய பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, மேற்கண்ட பணியிடங்களை பூர்த்தி செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றத்தின் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1203/2022/சி1)

**தீர்மானம் எண். 57**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–40**

உசிலம்பட்டி நகராட்சியில் பொதுச்சுகாதார பிரிவு ஓட்டுநர் பணியிடம் 18.04.2022 முதல் காலியாக உள்ளதால் உசிலம்பட்டி நகராட்சியில் 24 வார்டுகளிலும், பொது சுகாதார அத்தியாவசிய பணிகள் மேற்கொள்வதற்கு பொது சுகாதார பிரிவில் மொத்தம் இரண்டு டிப்பர் வாகனங்கள் உள்ளது ஆனால் அவற்றை இயக்குவதற்கு ஒரு ஓட்டுநர் மட்டுமே உள்ளதால் மிகவும் சிரமமாக இருப்பதால் மேற்படி பணியிடத்தினை பூர்த்தி செய்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 1204 /2022/சி1)

**தீர்மானம் எண். 58**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–41**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண். 1725/2022/எம்.3, நாள். 06.05.2022–இல் நகர்மன்ற தலைவர்கள் / நகராட்சி ஆணையாளர்கள் / நகராட்சி பொறியாளர்கள் அலுவலக பயன்பாட்டிற்கு புதிய ஈப்பு வாகனம் (ஸ்கோர்பியோ) வாங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் பொலிரோ வாகனத்திற்கு பதிலாக ஸ்கார்பியோ வாகனம் ரூ. 16,82,000/– இலட்சம் மதிப்பீட்டில் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEMRATE) விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு நகராட்சி பொதுநிதியில் கொள்முதல் செய்திடவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை வழியாக பின்னேற்பு பெற்று செயற்குறிப்பினை அனுப்பிட நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 895/2022/இ1)
**தீர்மானம் எண். 59**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**மன்றப்பொருள்–42**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 20.04.2022 தேதிய காணொலி ஆய்வு கூட்ட அறிவுரையின்படி நகராட்சி பழைய அலுவலக கட்டிடங்களை இடித்து புதிய அலுவலக கட்டிடங்கள் கட்ட தேவையான கருத்துருக்கள் தயார் செய்து அனுப்ப அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் உசிலம்பட்டி நகராட்சி அலுவலக பழைய கட்டிடம் நாள். 22.04.2022 அன்று நில அளவை பணி செய்யப்பட்டதில் உசிலம்பட்டி நகரம் புல வார்டு எண்–1, பிளாக் –14, டி.எஸ்.எண். 21/0–0.11.08 ஏர்ஸ் சர்க்கார் புறம்போக்கு ஆணையாளர் நகராட்சி அலுவலகம், சத்துணவு கூடம் உசிலம்பட்டி என நகர கணக்கில் உள்ளது எனவும் நகர புல FMB மற்றும் நகர அடங்கல் ஆகியன நகர சார் ஆய்வாளர் உசிலம்பட்டி அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. நகர சார் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரின் குறிப்பில் தெரிவித்துள்ள பழைய கட்டிடம் இயங்கிவரும் இடத்தில் புதிய அலுவலக கட்டிடம் கட்ட நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 757/2022/அ1)
**தீர்மானம் எண். 60**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்ற தலைவர்,
உசிலம்பட்டி நகராட்சி.